தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் 69வது சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 69வது சுதந்திர தினவிழா இன்று 15-8-2015 காலை 8.00 மணியளவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முனைவர் கு. இராமசாமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி சுதந்திர தினவிழா உரையாற்றினார். வேளாண்மைக் கல்லூரி முதன்மையர் முனைவர் எஸ்.மகிமைராஜா அவர்கள் துணைவேந்தரை வரவேற்றார்.

இந்தியத் தலைவர்களின் தியாகங்களை துணைவேந்தர் அவர்கள் தமது உரையில் நினைவு கூர்ந்தார். இந்தியா சுதந்திரம் அடைந்த நாள் முதல் நாம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று அனைவருக்கும் உணவு அளிக்கும் நிலையடைந்தோம். உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பையும் தற்போதுள்ள தேசத்தின் எதிர்பார்ப்பையும் சுட்டிக்காட்டினார். மக்களின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்காக நம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டுமென்று அனைவருக்கும் அரைகூவல் விடுத்தார். அறிவே தேசத்தின் சொத்து என்பதால் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் ஆசிரியர்களும் கடுமையாக உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். துணைவேந்தரது, சுதந்திர தினவிழா உரை அனைவரின் கவனத்தையும் ஈர்த்து தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக அமைந்து.

மேலும் திருத்துறைப்பூண்டி ஸ்ரீ ராகவேந்திரா மாற்றுத்திறனாளிகள் அறக்கட்டளை சார்பில், மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் நினைவாக ஓர் ஆண்டு முழுவதும் மாற்றுத்திறனாளிகள் சார்பாக மரம் நடும் விழிப்புணர்வு பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டுள்ள மூன்று மாற்றுத்திறனாளிகளைப் பாராட்டி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. இராமசாமி அவர்கள் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கவுரவித்தார்.

முன்னதாக பல்கலைக்கழகத்தின் தேசிய மாணவர் படை மாணவர்களோடு தேசிய மாணவர் அதிகாரிகள் செல்லமுத்து மற்றும் மனோன்மணி ஆகியோர் அளித்த வரவேற்பு மரியாதையை ஏற்றார். மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள்அனைவரின் கவனத்தையும்

ஈர்த்தது. சிறந்த தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சுமார் **300**க்கும் மேற்பட்ட மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், அலுவலர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்குள் செயல்படும் ஆரம்ப பள்ளி சிறார்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்